# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

***2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆம் திகதிய***
***பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2021.10.15 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## நீதித்துறை (திருத்தம்)

***1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தினைத்***
***திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 5இ என்னும் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது, மேல் நீதிமன்றங்களின் “பதிவு செய்யும் நீதிபதிகளாகப்” பணியாற்றுவதற்கு நீதிவான்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகளிடையே யிருந்து நீதிமுறை அலுவலர்களை நியமிப்பதற்கும், விளக்கத்துக்கு முன்னரான மற்றும் விளக்கத் துக்குப்பின்னரான விடயங்களைக் கவனிப்பதற்கு அத்தகைய பதிவுசெய்யும் நீதிபதிகளுக்குத் தத்துவ மளிப்பதற்குமாகும்.

ச.வ.- ஓ. 20/2020

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்*

**2**. 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 5இ என்னும் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றதுடன், அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- *1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 5இ என்னும் பிரிவினை மாற்றீடு செய்தல்*

*"பதிவுசெய்யும் நீதிபதியின் நியமனம்*

5இ. (1) நீதிச்சேவை ஆணைக்குழுவானது மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்களிடையே இருந்து குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற ஏதேனும் மேல் நீதிமன்றத்திற்கு பதிவுசெய்யும் நீதிபதி என அழைக்கப்படும் நீதித்துறை அலுவலர் ஒருவரின் நியமனம் தேவைப்படுகின்றது என அத்தகைய ஆணைக்குழு அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய நியமனத்தைச் செய்தல் வேண்டும்.

(2) (இப்பிரிவில், "விளக்க நீதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மேல்நீதிமன்ற நீதிபதி, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, முன்விளக்க மாநாடுகளுக்கு தலைமை தாங்குவதற்கான தத்துவத்தை அத்தகைய மேல்நீதிமன்றத்திற்கென நியமிக்கப்பட்ட பதிவு செய்யும் நீதிபதிக்கு கையளிக்கலாம்.

(3) பதிவுசெய்யும் நீதிபதியானவர் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 195அ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு (2) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்கு கையளிக்கப்பட்ட முன்விளக்க மாநாடுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கை ஒன்றின்போது எழுகின்றதான குற்றஞ்சாட்டப்பட்டவரின் தண்டனைத் தீர்ப்பளிப்பிற்கு உட்படாத விளக்க நீதிபதியினால் அவருக்கு கையளிக்கப்பட்ட பின்விளக்க கருமங்களைக் கவனித்தலும் கையாளு தலும் வேண்டும்.

(4) விளக்க நீதிபதியானவர் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டத்தின்பின்னர் அந்நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்கு நடவடிக்கையின்போது எழுகின்ற நடவடிக்கை முறைசார் தன்மை பற்றிய ஏதேனும் கருமத்தை பதிவுசெய்யும் நீதிபதிக்கு ஆற்றுப்படுத்தலாம்.

(5) பதிவுசெய்யும் நீதிபதி, விளக்க நீதிபதியின் ஒருப்பாட்டுடன், அவரால் வேறுவகையில் முறையாக கையாளப்பட்டிருக்கக்கூடியதான ஏதேனும் கருமத்தை விளக்க நீதிபதியினால் தீர்மானிப்பதற்காக சமர்ப்பிக்கலாம்.

(6) பதிவுசெய்யும் நீதிபதி –

(அ) தனிவேறாக அமர்தல் வேண்டும் என்பதுடன் (3) ஆம் உட்பிரிவினால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் யாவற்றையும் பிரயோகித்தலும் வேண்டும்;

(ஆ) நீதிமன்றத்தின் நாளேடுகளை பேணுவது உட்பட (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்து

வங்களைப் பிரயோகிப்பதுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான அல்லது துணை நிலையான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) மேல் நீதிமன்றம் 9 ஆம் பிரிவின் நியதிகளின்படி குற்றவியல் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கின்ற கருமங்கள் தொடர்பில் மட்டும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 195அ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு முன்விளக்க மாநாடுகள் தொடர்பில் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் என்பதுடன் மேன்முறையீட்டு, மீளாய்வு அல்லது எழுத்தாணை நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்கு மேல்நீதிமன்றம் கோரப்படும் கருமங்கள் தொடர்பில் தத்துவங்களைப் பிரயோகித்தலாகாது.”.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.